# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 210/2015

பெயர் : முருகன் நாள் : 27.10.2022

வா.சா.3 – 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா..சா.3 – முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். கோவிலுக்கு செல்லும் பாதையை தடுத்துவிட்டார்கள், அதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார். யார் தடுத்துள்ளார்கள் என்றால், 1ம் பிரதிவாதி தடுக்கிறார். கோவிலானது எங்கள் குல தெய்வ கோவில் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது அவரும் கோவில் ஒரு காணியாச்சிக்காரர் என்றால், சரிதான். கோவில் எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்றால், அந்த விபரம் எனக்கு தெரியாது. ஊர்பொதுமக்கள் சேர்ந்து ஏன் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், கோவில் தர்மகர்த்தா பார்த்துக் கொள்கிறார், அதனால் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். கோவில் தர்மகர்த்தா நடராஜன் என்பவர் இறந்துவிட்டார் என்றால், சரிதான். அதன் பிறகு ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து தற்போது 2ம் வாதியை கோவில் தர்மகர்த்தாவாக நியமித்துள்ளோம். இந்த வழக்கானது ஊர்பொதுமக்கள் சேர்ந்து தாக்கல் செய்யவில்லை என்பதால், தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / முருகன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.